**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 49/2026**

2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 22ம் நாள் திங்கள் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **வானஜோதி** | **தொழில் :** | வீட்டுகுடித்தனம் |
| **தந்தை பெயர் :** | **பெரமநாதன்(late)** | **சமயம் :** | |
| **ஊர் :** | நாட்டுச்சாலை | **வயது** | 63 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**22.06.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 11.09.2002 தேதியிட்ட என் கணவரின் இறப்பு சான்றிதல் அசல் **வா.சா.ஆ. 1 ஆக** குறியிடுகிறேன். 10.01.2020 தேதியிட்ட கணிணி ஒப்புகை சீட்டு நகல் **வா.சா.ஆ. 2 ஆக குறியிடுகிறேன்.** 5ம் பிததிவாதி மறுத்த கணிணி உத்தரவு **வா.சா.ஆ. 3 ஆக** குறியிடுகிறேன்.

வாதி ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **வா.சா.ஆ. 4 ஆக** குறியிடுகிறேன். 2ம் பிரதிவாதி ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **வா.சா.ஆ. 5 ஆக** குறியிடுகிறேன். வாதியின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **வா.சா.ஆ. 6 ஆக** குறியிடுகிறேன். 1ம் பிரதிவாதி குடும்ப அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **வா.சா.ஆ. 7 ஆக**

குறியிடுகிறேன். 2,3,4 பிரதிவாதிகளின் ஆதார் அட்டை நகல் **வா.சா.ஆ. 8 ஆக** குறியிடுகிறேன்.

**5,6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்று வாங்க. 2 முதல் 4 பிரதிவாதிகள் வெளிநாட்டில் இருப்பதால் அவர்களை பிரதிவாதியாக காட்டியுள்ளேன் என்றால் ஆமாம். 5,6 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்புனர் என்பதால் அவர்களை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.